**அவசரகாலத் தேவைக்கு, Triple Zero (000) – வை அழையுங்கள்**

அவசர காலத்தில் காவல்துறை, தீயணைப்பு அல்லது ஆம்புலன்ஸைத் தொடர்புகொள்ள ஆஸ்திரேலியாவில் உள்ள எந்தத் தொலைபேசியிலிருந்தும் Triple Zero (000) –வை அழையுங்கள். அழைப்புகளுக்குக் கட்டணம் கிடையாது.



# 000

# EMERGENCY




**Triple Zero (000) – வை எப்போது அழைக்க வேண்டும்**
உயிருக்கு ஆபத்தான அல்லது இக்கட்டான சூழ்நிலையில் காவல்துறை, தீயணைப்பு அல்லது ஆம்புலன்ஸிடமிருந்து உடனடி உதவி தேவைப்படும் நேரத்தில் மட்டும் Triple Zero (000) –வை அழையுங்கள்.

**நான் Triple Zero (000) – வை அழைக்க நேர்ந்தால் என்ன நடக்கும்?**
உங்களுக்கு எந்த அவசரகாலச் சேவை தேவைப்படும் - காவல்துறையா, தீயணைப்பா அல்லது ஆம்புலன்ஸா - என்பதை ஆபரேட்டர் கேட்டறிந்து உங்களுக்கு இணைப்பு கொடுப்பார். நீங்கள் எங்கிருந்து பேசுகிறீர்கள் என்பதையும் ஆபரேட்டர் கேட்கலாம்.

**ஆங்கிலத்தில் பேசுவதில் எனக்குச் சிரமம் இருந்தால் என்ன செய்வது?**
உங்களுக்கு ஆங்கிலத்தில் பேசுவதில் சிரமம் இருந்தால், நீங்கள் வேண்டிக்கொண்டபடி அவசரகாலச் சேவைக்கு மாற்றப்பட்ட பின், நீங்கள் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளலாம். மொழிபெயர்த்துரைப்பாளருக்கு நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

**நீங்கள் Triple Zero (000) - வை அழைக்கும்போது அமைதியாயிருக்கவும். தொடர்பில் காத்திருக்கவும் அத்துடன் ஆபரேட்டரின் கேள்விகளுக்குத் தெளிவாகப் பதில் சொல்லவும்.**

www.**triplezero**.gov.au


Australian Government

acma
Australian Communications and Media Authority